**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 104** **நாள்: 27.07.2018**

**அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் நகரில் நடைபெற்ற சர்வதேச இசை விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்குபெற்று பாடல்கள் பாடி சிறப்பித்துள்ளனர் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சார்பில் சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்கள் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளில் பங்குபெற்று சாதனை படைப்பது என்பது தொடர் நிகழ்வாக நடைபெற்று வருகிறது. அதன் வரிசையில் அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் நகரில் நடைபெற்ற சர்வதேச இசை விழாவான வாஷிங்டன் இன்டர்நேஷனல் கோரல் (Washington International Choral) என்ற மாபெரும் சர்வதேச இசை நிகழ்ச்சியில் 17.07.2018 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்குபெற்று சிறப்பித்துள்ளனர்.

திருவான்மியூர் சென்னை மேல்நிலைப்பள்ளியில் 9 வகுப்பு பயிலும் மாணவன் தினேஷ், பெரம்பூர் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பயிலும் மாணவி சுனிதா, சைதாப்பேட்டை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பயிலும் மாணவி யாஷினி மற்றும் 9ம் வகுப்பு பயிலும் மாணவி ஸ்வேதா ஆகியோர் இந்த மாபெரும் சர்வதேச இசை நிகழ்ச்சியில் பங்கு பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மறைந்த தலைவர் நெல்சன் மண்டேலாவின் 100 வது பிறந்த தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த இசை நிகழ்ச்சியில் உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளை சார்ந்த இசைக்குழுக்கள் கலந்து கொண்டன. St. Paul's Epis Copal Church, Virginia: Patterson Park, Mary Land என்ற பகுதியில் அமைந்துள்ள John F Kennedy என்ற மையத்தில் இந்த விழா கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை 2200 பார்வையாளர்கள் கண்டுகளித்தனர்.

Nalanda Foundation என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம், The Chennai Children Choir (CCC) என்ற இசைக் குழுவானது உருவாக்கப்பட்டது. இக்குழுவில் 7 முதல் 17 வயதுடைய 600க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பல்வேறு பள்ளிகளிலிருந்து பங்குபெற்று, அதில் 21 மாணவ, மாணவியர்கள் மட்டும் வெற்றி பெற்று இறுதி நிகழ்ச்சிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவியர்களில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்கள் நான்கு பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்கள் அடங்கிய குழுவானது தமிழ், இந்தி மற்றும் வங்காள மொழி பாடல்களைப் பாடி பார்வையாளர்களை பரவசம் அடைய செய்து மகிழ வைத்தனர். இக்குழுவினர் தமிழில் பாடிய செந்தமிழ் நாடென்று தொடங்கும் பாடலும், வந்தேமாதரம் என்ற பாடலும், சென்னைப் பள்ளி மாணவர்களின் திறமையை அடையாளம் காண்பித்த நிகழ்வாக அமைந்தது மட்டுமின்றி, பெருமைக்குரிய செயலாகவும், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறைக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்துள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**